MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



# பொங்கட்டும் ஆனந்தம்

## தமிழர் திருநாள் நலவாழ்த்துக்கள்



To


If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

Diocese of Marthandam
மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



ஜனவரி 6

## தனஹா–நம் ஆண்டவரின் திருமுழுக்கு

மலர் 21 ஜனவரி 2025 இதழ் 1

## இம்மாதம் நினைவு கூர

ஜனவரி 2025

1 – நம் ஆண்டவரின் பெயரிடல்
ஆங்கிலப் புத்தாண்டு தினம்
மார் பசேலியோஸ், மார் கிரிகோரியோஸ்
மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்
காதோலிக்கா ஆண்டகையின் பெயர்விழா

1


2 – மார் மக்காறியோஸ் ஈஹீதோயோ
3 – இறைவாக்கினர் மலாக்கி
புனித சாவற குரியாக்கோஸ் ஏலியாஸ்

3



4 – அமெரிக்கா – கானடா மறைமாவட்ட உதயம்
5 – யல்தாவுக்குபின் இரண்டாம் ஞாயிறு
6 – தனஹா (நம் ஆண்டவரின் திருமுழுக்குத் திருநாள்)
7 – திருமுழுக்கு யோவானின் புகழ்ச்சி
புனித ஜுலியன்

6


8 – இரத்தசாட்சியாகிய புனித ஸ்தேவான்
பிலிப்போஸ் மார் ஸ்தேபானோஸ் ஆண்டகையின் பெயர்விழா
11 – யுஹானோன் மார் தியடோஷியஸ் ஆண்டகையின் பெயர்விழா
12 – தனஹாவுக்குப்பின் முதல் ஞாயிறு
14 – சீனாய் மலையின் 40 இரத்த சாட்சிகள் / புனித தேவசகாயம்
15 – விதைகளை முன்னிட்டு தூய இறையன்னையின் நினைவு
16 – கீவர்கீஸ் மார் திவன்னாசியோஸ் ஆண்டகையின் நினைவு
17 – எகிப்தின் மார் அந்தோணியார்
தோமஸ் மார் அந்தோணியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
18 – மோறோன் மோர் சிறில் பசேலியோஸ் காதோலிக்கோஸ் பாவா
மற்றும் ஜோசப் மார் சேவேறியோஸ் ஆண்டகைகளின் நினைவு
அலெக்ஸாண்டிரியாவின் மார் கூறிலோஸ், மார் அத்தனாசியோஸ்
திருச்சபையின் ஒன்றிப்பு வார மன்றாட்டு ஆரம்பம்
19 – தனஹாவுக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
கீவர்கீஸ் மார் மக்காறியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
20 – புனித செபஸ்தியார்
21 – புனித ஆக்னஸ்
22 – புனித திமோத்தியோஸ்

26


24 – புனித பிரான்சிஸ் சாலஸ்
25 – புனித பவுலின் மனமாற்றம்
திருச்சபையின் ஒன்றிப்பு வார மன்றாட்டு நிறைவு
26 – தனஹாவுக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
இந்திய குடியரசு தினம்
28 – புனித தோமஸ் அக்குவினாஸ்
29 – மார் இக்னாத்தியோஸ், யோசுவா மார் இக்னாத்தியோஸ்
ஆண்டகையின் பெயர்விழா
31 – புனித தோன் போஸ்கோ

31





# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 ஜனவரி 2025 இதழ். 1



**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Cover Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press,*
*Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*






மலர். 21 டிசம்பர் 2024 இதழ். 12


Address :
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail : mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam



மலர். 22 ஜனவரி 2025 இதழ். 1

## முக்கியமான நாட்கள்
ஜனவரி 2025

| | |
|---|---|
| 01 | புத்தாண்டு தினம்<br>உலகளாவிய குடும்ப தினம் |
| 04 | உலக பிரெய்லி தினம் |
| 06 | தேசிய தொழில்நுட்ப தினம் |
| 12 | தேசிய இளைஞர் தினம்<br>சர்வதேச |
| 14 | பொங்கல் |
| 15 | இந்திய ராணுவ தினம் |
| 18 | தேசிய நோய்த்தடுப்பு நாள் |
| 19 | உலக மத தினம் |
| 24 | சர்வதேச கல்வி தினம்,<br>தேசிய பெண் குழந்தைகள் தினம் |
| 25 | தேசிய சுற்றுலா தினம்,<br>வாக்காளர் தினம் |
| 26 | குடியரசு தினம்,<br>சர்வதேச சுங்க தினம் |
| 30 | தியாகிகள் தினம்,<br>உலக தொழுநோய் தினம் |

## உள்ளடக்கம்


1. புது ஆலய அர்ச்சிப்பு 3
2. குருக்களின் தியானம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 3
3. உபதேசிமார்களுக்கான கூடுகை 4
4. இளங்குருமடச் செய்திகள் 5
5. மறைபரப்பு தளச்செய்திகள் 6
6. நற்செய்தி சங்க செய்திகள் 7
7. மேரி மக்கள் துறவற சபை 8
8. திருமண ஆயத்தப்பயிற்சி 8
9. MIDS 9
10. MCA 13
11. பெயர்விழா நல்வாழ்த்துக்கள் 15
12. Health for One Million (HOM) 16
13. மறைவட்ட செய்திகள் 16
14. ஆயரின் டிசம்பர் மாத நிகழ்வுகள் 19
15. Bishop's Diary 22
16. இம்மாதம் நினைவு கூர 24



*Printed by*
**Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852**




# புது ஆலய அர்ச்சிப்பு

மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்கு உட்பட்ட கோயிக்கல்தோப்பு புனித தோமையார் மலங்கரை கத்தோலிக்க தேவாலயத்தின் புது ஆலய அர்ச்சிப்பு விழா 29/12/24, ஞாயிற்றுக்கிழமை, அன்று சிறப்பாக நடைபெற்றது. புது ஆலயத்தை மேதகு ஆயர் வின்செட் மார் பவுலோஸ் அவர்கள் அர்ச்சித்து முதல் திருப்பலி ஆற்றினார்கள். மறைமாவட்டத்தின் முதன்மை குரு மற்றும் அருட்தந்தையர்கள் அருட்கன்னியர்கள் இறைமக்கள் ஏராளமானோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். புது ஆலய கட்டுமானத்திற்காக உழைத்த பணியாளர்களையும் நன்கொடையாளர்களையும் ஆயர் அவர்கள் கௌரவித்தார்கள்.

# குருக்களின் தியானம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களுக்கான டிசம்பர் மாதத்திற்கான தியானம் ஆயர் இல்லத்தில் வைத்து 16.12.2023 அன்று நடைபெற்றது. வெட்டுமணி புனித அந்தோனியார் திருத்தல அதிபர் பேரருட்தந்தை சகாயதாஸ் அவர்கள் தியானத்தை வழி நடத்தினார்கள், இதில் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து அருட்தந்தையர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மாதாந்திர தியானத்தைத் தொடர்ந்து மறைமாவட்ட அருட்தந்தையர்கள் மற்றும் ஆயர் அவர்கள் இணைந்து கிறிஸ்து

பிறப்பு விழாவை கொண்டாடினார்கள். இக்கொண்டாட்டத்தில் மேதகு ஆயர் அவர்கள் கிறிஸ்து பிறப்பு செய்தியை வழங்கினார்கள். பேரருட்தந்தை தேவதாஸ் அவர்களின் குருத்துவ அருட்பொழிவின் வெள்ளி விழாவை முன்னிட்டு அவர் எழுதிய 'பெரிய இறைவாக்கினர்கள் : வினா விடை வடிவில், பாகம் 5, 6' என்ற புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

அருட்தந்தையர்கள் இணைந்து கிறிஸ்து பிறப்பு பாடலை பாடி சிறப்பித்தார்கள். இறுதியில் கிறிஸ்துமஸ் சிறப்பு பரிசு வழங்குதலோடு நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

## உபதேசிமார்களுக்கான கூடுகை

கிறிஸ்து பிறப்பு திருநாளை முன்னிட்டு மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலுமுள்ள உபதேசிமார்களுக்கான கூடுகையானது மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் டிசம்பர் மாதம் 21-ஆம் தேதி ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வில் மேதகு ஆயர் அவர்கள் கிறிஸ்து பிறப்பு செய்தியை வழங்கினார். இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு இறைவார்த்தை தியான வாசிப்பு பயிற்சியானது வழங்கப்பட்டது. இறுதியில் அனைத்து உபதேசிமார்களுக்கும் கிறிஸ்துமஸ் பரிசுகள் வழங்கப்பட்டன.



## இளங்குருமடச் செய்திகள்

❖ இளம் குருமடத்தில் கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் குருமட விழா ஆகிய இருபெரும் விழாக்கள் 23/12/2024 அன்று மாலை குருமட வளாகத்தில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை தலைமையில், குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் மற்றும் மேரி மக்கள் கன்னியர் சமூகத்தின் மார்த்தாண்டம் மாகாண தலைவி Rev. Sr. ரோஸ் பிரான்சிஸ் DM அவர்களின் பிரசன்னதில் இனிதே நடைபெற்றது. முதலில் மேதகு ஆயர் இளம் குருமட சகோதரர்களின் பெற்றோர்களை சந்தித்து உரையாடினார். தொடர்ந்து மாலை ஜெபமும் அதனை தொடர்ந்து கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் குருமட விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அருட்சகோதரர்கள் கிறிஸ்து பிறப்பு விழாவை தங்கள் குடும்பத்தினரோடு கொண்டாடும் வகையில் இளம்குருமட சகோதரர்களுக்கு டிசம்பர் 24 முதல் ஜனவரி 5 வரை விடுமுறை வழங்கப்பட்டது.

# மறைபரப்பு தளச்செய்திகள்

### நல்லநாதபுரம் மற்றும் JJ நகர் மாறைபரப்பு தளங்கள்

- திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு பகுதியில் நல்லநாதபுரத்திலும் JJ நகரிலும் மறைபரப்புத்தளங்கள் உள்ளன. இங்குள்ள மக்கள் சேர்ந்து நல்லநாதபுரம் மறைபரப்பு தளத்தில் வைத்து 14.12.2024 அன்று நமது மார்த்தாண்டம் மறைமாவடத்தின் MCA இயக்குநர் அருட்தந்தை அர்னால்டு டயஸ் மற்றும் ஆன்மீக வழிகாட்டியாள் மேரிமக்கள் கன்னியர்களின் மாகாணத்தலைவி மதர் றோஸ் பிரான்சிஸ் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட MCA உறுப்பினர்களும் சேர்ந்து கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடைபெற்றது. அப்போது இரண்டு மறைபரப்பு தளங்களிலும் உள்ள குடும்பங்களுக்கு உணவு பொருட்கள் மற்றும் துணிகள் அடங்கிய பொட்டலம் வழங்கப்பட்டது. நல்லநாதபுரம் மறைபரப்பு தளத்திற்கு ஒலிப்பெருக்கி ஒன்றும் அன்பளிப்பாக வழங்கினார்கள். பின்னர் JJ நகர் மறைபரப்பு தளத்தில் MCA உறுப்பினர்கள் ஒருசில வீடுகளும் சந்தித்தனர்.

### மதுரை மறைபரப்புத்தளம்

- மதுரை மறைபரப்புத்தளத்தில் 18.11.2024 அன்று MIDS இயக்கத்திலிருந்து மதுரை ரீஜியன் ஒருங்கிணைப்பாளர் திரு. தேவராஜ் தலைமையில் MIDS குழுக்கள் பார்வையிடப் பட்டது. தொடர்ந்து குழுக்கள் சார்ந்த ஒருநாள் பயிற்சியும் கொடுக்கப்பட்டது. அன்று புதிதாக ஒரு குழுவும் ஆரம்பிக்கப் பட்டது.



### திருச்சி மறைபரப்புத்தளம்

- திருச்சி மாவட்டத்தில் ஓலயூர் என்ற பகுதியில் மறைபரப்புத்தளம் சிறப்பாக வளர்ந்து வருகிறது. மக்கள் ஒன்றுகூடுவதற்கும் திருநிகழ்வுகள் நடத்துவதற்கும் தேவையான சமூகக்கூடத்தின் வேலையானது சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

### தேவதானப்பட்டி மறைபரப்புத்தளம்

- தேவதானப்பட்டி மறைபரப்புத்தளத்தில் 19.11.2024 அன்று MIDS அலுவலக பொறுப்பாளர் சுய உதவி குழுக்களின் உறுப்பினர்களை சந்தித்து பயிற்சி அளித்தார். அன்றைய தினம் புது சுய உதவி குழு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.
- கிறிஸ்து பிறந்த திருச்சடங்கு மற்றும் திருப்பலி 24-12-2024 அன்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. ஏறத்தாழ 300-க்கும் அதிகமான மக்கள் இத்திருவிழாவில் கலந்துகொண்டனர்.

# நற்செய்தி சங்க செய்திகள்

மறைமாவட்ட அளவிலான நற்செய்தி சங்க வகுப்பானது இந்த மாதம் 7 மற்றும் 8-ம் ஆகிய நாட்களில் மரியகிரி ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை பெனடிக்ட் OIC அருட்தந்தை ஜோளி கரும்பில் மற்றும் அருட்சகோதரி மேரி பிரசாத் அவர்களால் வகுப்புகள் நடத்தப்பட்டது. இவ்வகுப்பில் திருப்பலி மற்றும் இறந்த பின் உள்ள நிலைவாழ்வு பற்றி சொல்லிக்கொடுக்கப்பட்டது.

# மேரி மக்கள் துறவற சபை

மேரி மக்கள் (DM) துறவற சபையில் புனித சூசையப்பர் மாகாண உறுப்பினரான அருட்சகோதரி நிர்மலா டி.எம் (92) அவர்கள் 31/12/24 அன்று இறைவனடி சேர்ந்தார். அருட்சகோதரி அவர்கள் தலச்சேரி மறைமாநிலம் சக்கெட்டுப்பாறை பங்கில் குருசுமூட்டில் வீட்டில் காலம் சென்ற திரு. K.C. மேத்யூ திருமதி மரியம் தம்பதியினரின் இரண்டாவது மகள். இவர் மார்த்தாண்டம், அஞ்சல், ஜெர்மனி டோட்முண்ட், கிராத்தூர், பனச்சமூடு, சென்னை, இளையாங்கண்ணி, கூட்டார் போன்ற மடங்களில் துறவற இல்ல தலைமை அருட்சகோதரியாகவும், செவிலியராகவும் மறைபரப்பு பணியாளராகவும் இருந்து செயல்பட்டார்கள்.



அருட்சகோதரி **நிர்மலா டி.எம்** (92)

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 ஜனவரி** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **17, 18** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## தளிர்கள் உலகம் – கிறிஸ்துமஸ் விழா

தளிர்கள் உலக பயனாளிகளுக்கான கிறிஸ்மஸ் தினவிழாவானது 14.12.2023 அன்று மிட்ஸ் கலை அரங்கில் வைத்து நடத்தப்பட்டது. மறைமாவட்ட முதன்மைகுரு மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆஸ்திரேலியாவை சேர்ந்த Mr. Greg Holland & Mr. Geof Holland ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம், ஆசிரியை அனிதா, திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி வினிதா ராணி மற்றும் மாணவி திவ்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் கிறிஸ்மஸ் செய்தி அளித்து மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்து வழங்கியதுடன் மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்வினையும் துவங்கி வைத்தார்கள். மாணவி திவ்யா கிறிஸ்மஸ் செய்தி அளித்தார்கள். பின்னர் Mr. Greg Holland & Mr. Geof Holland, திட்டஅலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், ஆசிரியை அனிதா ஆகியோர் கிறிஸ்மஸ் வாழ்த்துரை வழங்கினார்கள். இடையிடையே மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து Mr. Greg Holland & Mr. Geof Holland ஆகியோர் கிறிஸ்மஸ் கேக் வெட்டி அனைவருக்கும் பகிர்ந்தார்கள். பின்னர் குழந்தைகள் தினவிழாவின்போது நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் ஒழுங்காக வகுப்புகளில் கலந்துகொண்ட தாய்மார்களுக்கும், அனைத்து மாணவர்களுக்கும் கிறிஸ்மஸ் பரிசுகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து 235 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 2,35,000/- கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. இவ்விழாவில் 193 மாணவமாணவிகளும் 186 பெற்றோர்களும் என மொத்தம் 379 பேர் கலந்துகொண்டனர்.

**நிறைவாழ்வு சங்கம் – கிறிஸ்மஸ் விழா**

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் நிறைவாழ்வு சங்க கிறிஸ்மஸ் விழாவானது 17.12.2023 அன்று மிட்ஸ் கலையரங்கில் வைத்து நடத்தப்பட்டது. மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் விழாவிற்கு தலைமை வகிக்க, பெடரல் வங்கி மேலாளர் திரு. பிரதாப சந்திரன், தமிழக பெண்கள் கூட்டமைப்பின் செயலர் திருமதி சோபனா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்று மிட்ஸின் செயல் திட்டங்களை குறித்து விளக்கினார்கள். திட்ட அலுவலர் அவர்கள் மிட்ஸ் நிறுவனம் வழியாக மக்கள் அடைந்த நன்மைகள் மற்றும் நிறுவன முன்னேற்றம் குறித்து விவரித்தார்கள். ஆயர் அவர்கள் கிறிஸ்மஸ் செய்தி அளித்து கேக் வெட்டி அனைவருக்கும் பகிர்ந்தார்கள். சிறப்பு விருந்தினர்கள் கிறிஸ்மஸ் வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவில் பெடரல் வங்கி சார்பாக மிட்ஸ் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு ரூபாய் 5 கோடி கடனுதவிக்கான காசோலையை வங்கி மேலாளர் திரு. பிரதாப சந்திரன் ஆயர் அவர்களிடம் வழங்க, ஆயர் அவர்களிடமிருந்து மிட்ஸ் இயக்குநர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு ஏழை பெண்களுக்கு வழங்குவதற்காக குழுக்களின் பொறுப்பாளர்கள் அனைத்து சுய உதவி குழுக்கள் சார்பாகவும் சேலைகள் வாங்கி சேவை மனதுடன் அளித்தனர். பின்னர் ஒழுங்காக கிளஸ்டர் கூட்டங்களில் கலந்துகொண்ட பொறுப்பாளர்களுக்கும்,



ஐக்கிய சுடர் குறுக்கெழுத்து போட்டிகளில் வெற்றிபெற்ற உறுப்பினர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர் தேசியகீதத்துடன் விழா நிறைவு பெற்றது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிட்ஸ் ஒருங்கிணைப்பாளர் திரு. பேட்ரிக் ஆன்றனி மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்.

**வரதட்சணை தடுப்பு – சிறப்பு கருத்தரங்கு**

கன்னியாகுமரி மாவட்டத்தின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக, நவம்பர் 26 அனுசரிக்கப்படும் வரதட்சணை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சிறப்பு கருத்தரங்கு மிட்ஸ் கலைஅரங்கில் வைத்து நடத்தப்பட்டது. காலை 10 மணிக்கு துவங்கிய இந்தகருத்தரங்கில் வரதட்சணை தடுப்பு சட்டம் குறித்த பல்வேறு கருத்துக்கள் பகிரப்பட்டன. குறிப்பாக, வரதட்சணை கேட்பதற்கு நீதிமன்றத்தால் வழங்கப்படும் தண்டனைகள், எவையெல்லாம் வரதட்சணை தடுப்புசட்டத்திற்குள் அடங்கும், வரதட்சணை கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண் வழக்கு தொடர வேண்டிய வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள், பேசப்பட்ட வரதட்சணையை கொடுக்க இயலாத தருணத்தில் மணமகன் குடும்பத்தினர் நிவாரணம் கோர இயலுமா? ஒருபெண் திருமணம் முடிந்த ஏழாண்டுகளுக்குள் இறந்துபோனால் வரதட்சணையாக கொடுக்கப்பட்டபொருட்களை யாரிடம் ஒப்படைக்கவேண்டும்? மற்றும் இச்சட்டத்தின் நடைமுறைகள் என்னென்ன? என்றும் அவற்றை எவ்வாறு கையாளவேண்டும் என்றும் சிறப்பான முறையில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. மேலும் கல்லூரி மாணவர்களின், விழிப்புணர்வு நாடக நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. இந்த கருத்தரங்கில் மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 150 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

**உதவித் திட்டங்கள்**

1. 18.12.2024 அன்று களியக்காவிளை பணிமண்டலத்தின் 10 சுய உதவி குழுக்களில் உள்ள 40 சுய உதவி குழு

உறுப்பினர்களுக்கு விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக ரூபாய் 20,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்**

1. 20.11.2024 முதல் 07.12.2024 வரை Development Dynamics Course (DDC) இல் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

2. 21.11.2024 அன்று மத்தியாஸ் நகர் ஆலய வளாகத்தில் வைத்து மிட்ஸ் மற்றும் Sri Ram Fondation இணைந்து நடத்திய இலவச புற்றுநோய் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில் 31 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

3. 27.11.2024 அன்று விண்ணைத்தொடு திட்டத்தின் Transition திட்டம் குறித்த ஆலோசனை கூட்டமானது தேமானூர் மேட்ரிக்ஸ் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் அருட்தந்தை மரிய அற்புதம், அருட்தந்தை செலஸ்டின், அருட்தந்தை ஏசுதாஸ், CRS பணியாளர் Ms. சஞ்சனா, திரு. ஜெறோம் மற்றும் விண்ணைத்தொடுதிட்ட அலுவலர் திருமதி வினிதாராணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

4. 04.12.2024 அன்று கோல்பிங் சார்பாக கள்ளிகுளம் பகுதியில் செயல்பட்டு வரும் கோல்பிங் குடும்பங்களில் உள்ள 20 நபர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

5. 10.12.2024 ரூ 11.12.2024 ஆகிய இரண்டு தினங்கள் மகாபலிபுரத்தில் வைத்து நடைபெற்ற தேசிய அளவிலான கோல்பிங் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் மற்றும் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. சஜிக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# MCA

## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலங்கரைக் கத்தோலிக்க இயக்கத்தின் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு 05/01/2025 அன்று பிற்பகல் 3 மணிக்கு மார் எஃப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்றது. புதிய மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் புதிய பொறுப்பாளர்கள் பெயர் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | President | Mr. Varghese Y. |
| 2. | Vice President (Male) | Mr. Raj |
| 3. | Vice President (Female) | Mrs. Pasily |
| 4. | General Secretary | Dr. K.C. Bright |
| 5. | Secretary | Mrs. Ambly |
| 6. | Treasurer | Mr. Robinson |
| 7. | Executive Committee - 1 | Mr. Binu |
| 8. | Executive Committee - 2 | Mr. Aruldhas |
| 9. | Executive Committee - 3 | Mrs. Latha |
| 10. | Member of Central Committee - 1 | Mr. Rajendra Babu |
| 11. | Member of Central Committee - 2 | Mr. Paul Raj |
| 12. | Member of Central Committee 3 (Female) | Mrs. Baby Mary |
| 13. | Member | Mr. Vijaya Kumar |
| 14. | Member | Mr. T. Selva Raj |
| 15. | Member | Mr. Stephen |
| 16. | Member | Mr. Vinu |
| 17. | Member | Mr. Sunil Kumar |
| 18. | Member | Mr. Rabi |
| 19. | Member | Mr. John |
| 20. | Member | Mr. Lenin Xavier |
| 21. | Member | Mr. Justus |
| 22. | Member | Mrs. Maria Selvi |
| 23. | Member | Mrs. Glory |
| 24. | Member | Mrs. Mary Rajam |
| 25. | Member | Mrs. Girija |

மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA சார்பாக இவ்வருடம் கிறிஸ்துமஸ் கூட்டுகையானது மறைபரப்புத்தளமான நல்லநாதபுரத்தில் வைத்து 14.12.2024 அன்று மாலை சுமார் 4 மணியளவில் நடைபெற்றது. MCA மறைமாவட்ட ஆன்மீக இயக்குநர், அருட்தந்தை அர்னால்டு டயஸ், மேரி மக்கள், கன்னியர் சமூக புனித ஜோசப் மாகாணத்தலைவி மதர் றோஸ் பிரான்சிஸ் DM மற்றும் 11 நிர்வாகிகள் மற்றும் நல்லநாதபுரம் மறைபரப்புத்தள பங்குத்தந்தை அருட்தந்தை பென்னட் மற்றும் பங்கு நிர்வாகிகள் பிள்ளைகள் இவ்விழாவில் கலந்து கொண்டு கிறிஸ்துமஸ் கேக் வெட்டி இவ்விழாவைக் கொண்டாடினர். மேலும் மறைமாவட்ட MCA சார்பாக கிறிஸ்மஸ் பரிசுகள் மற்றும் அப்பங்கில் ஒலி, ஒளி அமைப்பதற்கான நன்கொடையும் வழங்கப்பட்டது. பின்னர் இந்த மறைமரப்புத்தளத்தோடு தொடர்புடைய J.J நகர் காலனிக்கு சென்று அங்குள்ள ஒரு சில வீடுகளும் பார்வையிடப்பட்டன.





# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்




அருட்தந்தை இயேசுதாஸ்
ஜனவரி 06



அருட்தந்தை ஸ்டீபன் மாத்தார்
ஜனவரி 08



அருட்தந்தை ஸ்டீபன் பாலவிளை
ஜனவரி 08



அருட்தந்தை தேவதாஸ்
ஜனவரி 14



அருட்தந்தை அர்னால்டு டயஸ்
ஜனவரி 15



அருட்தந்தை சிபி
ஜனவரி 20



அருட்தந்தை பாபுராஜ்
ஜனவரி 31

## HEALTH FOR ONE MILLION (HOM)
### Diocese of Marthandam

- ❖ டிசம்பர் 8 கன்னியாகுமரி மாவட்ட கத்தோலிக்க மருத்துவர்களின் மாநாடு சுங்காங்கடை சவேரியார் செவிலியர் கல்லூரியில் ஹோம் இயக்குனர் மேற்பார்வையில் நடைபெற்றது.
- ❖ டிசம்பர் 23-ம் தியதி HOM பணியாளர்களின் கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. டிசம்பர் 01 உலக AIDS தின விழிப்புணர்வு கூட்டம், சூசையபுரம்

# மறைவட்ட செய்திகள்

## அழகியமண்டபம் மறைவட்டம்

அழகியமண்டபம் மறைவட்டம் சார்பாக விவிலிய ஆண்டு lectio divina கருத்தரங்கு செல்லங்கோணம் பங்கில் வைத்து 8-ம் தேதி நடைபெற்றது. இதில் மறைக்கல்வி ஆசிரியர்கள் சுமார் 46 பேர் பங்கு கொண்டனர்.

15-ஆம் தேதி பிலாங்காலை பங்கில் வைத்து பிற்பகல் 3:30 மணிக்கு அழகியமண்டபம் மறைவட்ட MCA செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

15-ஆம் தேதி செல்லங்கோணம் பள்ளிக்கூடத்தில் வைத்து அழகியமண்டபம் மறைவட்ட MCCL சிறார்களுக்கான ஒயிலாட்டம் மற்றும் வினாடி வினா போட்டிகள் நடைபெற்றன.



22-ம் தேதி காட்டுவிளை பங்கில் வைத்து பிற்பகல் 2 மணிக்கு மறைவட்ட MCYM கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. சுமார் 50-க்கும் மேற்பட்ட இளையோர்கள் கலந்து கொண்டனர்.

## குலசேகரம் மறைவட்டம்

1. குலசேகரம் மறைவட்டம் சார்பாக மேய்ப்பு பணி அறிவுரைக் குழு பொறுப்பாளர்கள் கூட்டமும், கிறிஸ்துமஸ் கொண்டாட்டமும் டிசம்பர் 15-ம் நாள் குலசேகரம் பங்கில் வைத்து நடைபெற்றது.
2. வின்செண்ட் தே பவுல் இயக்கம் சார்பாக ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் செருப்பாலூர் பங்கில் வைத்து டிசம்பர் 22-ம் நாள் நடைபெற்றது இதில் சுமார் 220 ஏழைகளுக்கு கல்வி மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டது.
3. குலசேகரம் மறைவட்டம் சார்பாக ஐக்கிய கிறிஸ்தவ பேரவை டிசம்பர் 29-ம் நாள் குலசேகரம் புனித அகுஸ்தினார் தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது.
4. கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு MCCL பிள்ளைகளுக்கு ஒயிலாட்டப் போட்டியானது அணக்கரை பங்கில் வைத்து நடைபெற்றது.
5. கிறிஸ்துமஸ் திருப்பலியை நிறைவேற்ற மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் செருப்பாலூர் பங்கில் வருகை புரிந்தார்கள்.

6. சாரூர் பங்கில் அரங்கமானது ஆயரின் தலைமையில் திறக்கப்பட்டது.
7. குலசேகரம் மறைவட்ட குருக்கள் அருட்கன்னியர் களுக்கான கூடுகை நடைபெற்றது.
8. மாத்தார் மற்றும் சாரூர் பங்குகளை சுவிட்சர்லாந்தை சார்ந்த அருட்தந்தை ரோட்சே அவர்கள் பார்வையிட்டார்.

## பனச்சமூடு மறைவட்டம்

### பனச்சமூடு மறைவட்ட கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம்

பனச்சமூடு மறைவட்டத்தில் கிறிஸ்துமஸ் விழாவானது 15.12.2024 அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அனைத்து பக்த இயக்கங்களும் இணைந்து இவ்விழாவினை கொண்டாடினர். குறிப்பாக பாலர் சபை பிள்ளைகளுக்கான ஓயிலாட்டப் போட்டியும் நடைபெற்றது. அதன்பிறகு நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவிற்கு மேரி மக்கள் கன்னியர் சமூகத்தின் மார்த்தாண்டம் மாகாணத்தின் தலைவி மதர் றோஸ் பிரான்சிஸ் கிறிஸ்து பிறப்புச் செய்தியை வழங்கினார். அனைத்து பங்குகளில் இருந்தும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. MCYM சார்பாக மறைவட்ட அளவில் நடைபெற்ற எழுத்து போட்டிகளுக்கான பரிசுகளும் அன்று வழங்கப்பட்டன.



## ஆயரின் டிசம்பர் மாத நிகழ்வுகள்



- 1 ➢ புத்தூர் பங்கில் அருட்தந்தை மேத்யூ கடகம்பள்ளில் அவர்களின் நினைவு திருப்பலி மற்றும் தூப மன்றாட்டிற்கு தலைமை தாங்கினார்.
- 2-6 ➢ வின்சென்திய சமூகம் அருட்தந்தையர்களுக்கு ஆண்டு தியானம் வழங்கினார்.
- 8 ➢ பத்தனம்திட்டை பூங்காவு ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.
- 8 ➢ நாரங்கானம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.
- 10 ➢ பெருவிளை திருத்தல வளர்ச்சி பணிக்குழு கூட்டத்தில் தலைமை தாங்கினார்.
- 11 ➢ மலங்கரை விளக்கு வினாடி-வினா போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு வழங்கினார்.
- 12 ➢ நாகர்கோவில் கன்கோடியாவில் லூத்தரன் சபை கிறிஸ்துமஸ் கூடுகையில் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்.

14 ➢ முட்டத்தில் வைத்து நடைபெற்ற ஐக்கிய கிறிஸ்தவ பேரவையின் கிறிஸ்துமஸ் கூடுகையில் தலைமை தாங்கினார்.

14 ➢ மார்த்தாண்டம் நிதி லிமிடெட் கிறிஸ்துபிறப்பு கூடுகைக்கு தலைமை தாங்கி கிறிஸ்து பிறப்பு செய்தி வழங்கினார்.

14 ➢ நெய்யூரில் வைத்து நடைபெற்ற ஐக்கிய கிறிஸ்தவ பேரவையின் கிறிஸ்துமஸ் கூடுகையில் தலைமைதாங்கி கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்.

15 ➢ மரியகிரி ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.

15 ➢ கொல்லங்கோடு மறைவட்ட MCA கிறிஸ்துமஸ் கூடுகையில் தலைமை தாங்கி கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்.

16 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற குருக்களுக்கான மாதாந்திர தியானத்திலும் கிறிஸ்துமஸ் கூடுகையிலும் கலந்து கொண்டார்.

17 ➢ MIDS அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற சுயஉதவி குழு கிறிஸ்துமஸ் கூடுகையில் கலந்து கொண்டு கிறிஸ்து பிறப்பு செய்தி வழங்கினார்.

18 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தில் குருமாணவர்களுக்கு வகுப்பு எடுத்தார்.

20 ➢ திருவனந்தபுரம் சர்வோதயா பள்ளிகூடத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்துமஸ் கூடுகையில் கலந்துகொண்டு கிறிஸ்து பிறப்பு செய்தி வழங்கினார்.

20 ➢ ஐக்கிய கிறிஸ்துமஸ் மார்த்தாண்டம் அறக்கட்டளை சார்பாக நடைபெற்ற கிறிஸ்துமஸ் கூடுகையில் தலைமையேற்று நலத்திட்டங்களை வழங்கினார்.

21 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட உபதேசியர் கூட்டத்தில் தலைமை தாங்கினார்.



21 ➢ குழித்துறை மார் இவானியோஸ் CBSE பள்ளிக்கூடத்தில் பள்ளி ஆண்டுவிழா கூட்டத்தில் தலைமை தாங்கினார்.

22 ➢ தாய்மார் சங்க கிறிஸ்துமஸ் கூடுகையில் தலைமை தாங்கி கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்.

23 ➢ இளங்குருமடத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்துமஸ் கூடுகையில் தலைமை தாங்கி கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார்.

24 ➢ கிறிஸ்து பிறப்பு திருச்சடங்கு மற்றும் திருப்பலியை செருப்பாலூர் ஆலயத்தில் நிறைவேற்றினார்.

27 ➢ ஆதிச்சவிளாகம் ஆலயத்தில் திருமண அருட்சாதனம் வழங்கினார்.

28 ➢ வின்செண்ட்-தே-பவுல் சங்கத்தின் ஜூபிலி கொண்டாட்டத்தில் தலைமை தாங்கினார்.

29 ➢ கண்ணக்கோடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி ஆசி வழங்கினார்.

29 ➢ கோயிக்கல்தோப்பு புனித தோமையார் புது ஆலயத்தை அர்ச்சித்து திறந்து வைத்தார்.

31 ➢ புது வருட திருப்பலியை பாலவிளை ஆலயத்தில் நிறைவேற்றினார்.



# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 02.01.2025 | Thursday | 9.00 am<br>2.30 pm<br>5.00 pm | Feast Mass<br>Marriage<br>Holy Mass | Trivandrum<br>Elamadu<br>Cheriyanadu |
| 03.01.2025 | Friday | 4.00 pm | Priestly Jubilee Mass | Mariagiri |
| 04.01.2025 | Saturday | 4.00 pm | Priestly Jubilee Mass | Cathedral Marthandam |
| 05.01.2025 | Sunday | 8.00 am<br>9.00 am<br>10.00 am | Jubilee Year Inauguration<br>Laying Foundation Stone for Adoration Chapel<br>Feast Mass | Cathedral Marthandam<br>Ambilikonam<br>Manjathoppu |
| 06.01.2025 | Monday | 10.30 am<br>3.00 pm | Marriage<br>House Warming | Adichavilagam<br>Meenachal |
| 07.01.2025 | Tuesday | 10.00 am | Convocation - Major Seminary | Kotayam |
| 08.01.2025 | Wednesday | 3.00 pm | Liturgical Commission Meeting | Bishop's House |
| 10.01.2025 | Friday | 10.00 am<br>2.30 pm | Labour Commission Meeting<br>School Day | Bishop's House<br>Kirathoor |
| 11.01.2025 | Saturday | 7.00 am<br>10.00 am | Holy Mass<br>School Board Meeting | SIC Convent, Nalanchira<br>Bishop's House |
| 12.01.2025 | Sunday | 2.30 pm | Aniversary - Legion of Mary | Kuzhithurai |
| 13.01.2025 | Monday | 10.30 am<br>6.00 pm | Marriage<br>Feast Mass | Pinkulam<br>Devadanapatti |
| 14.01.2025 | Tuesday | 10.00 am<br>4.00 pm | Feast Mass<br>Feast Mass | Peruvilai Shrine<br>Nattalam Shrine |
| 15.01.2025 | Wednesday | 11.00 am | Marriage | Trivandrum |
| 16.01.2025 | Thursday | 10.00 am | Sunday School Teacher's Gathering | Pastoral Centre Kuzhithurai |
| 18.01.2025 | Saturday | 10.00 am | Inauguration of Acadamic Year 2025 - Malankara School of Word & Worship | Bishop's House |
| 19.01.2025 | Sunday | 9.00 am | Sunday School Student's Gathering and Holy Mass | Pastoral Centre Kuzhithurai |
| 20.01.2025 | Monday | 6.30 am | Jubilee Mass - DM Sisters | DM Convent Marthandam |
| 24.01.2025 | Friday | 10.30 am | Marriage | Mariagiri |
| 25.01.2025 | Saturday | <br>6.30 pm | MSC Teachers Gathering<br>Vespers and Preaching | Mariagiri<br>Madathattuvilai |
| 26.01.2025 | Sunday | <br>3.00 pm | Feast Mass<br>MCCL - Anniversary | Kallusheri<br>Kuzhithurai |
| 29.01.2025 | Wednesday | 9.00 am | Feast Mass | Mavelikara |


கோயிக்கல்தோப்பு - புது ஆலயம் அர்ச்சிப்பு


உபதேசிமார் கூடுகை


மறைவட்ட செய்திகள்
குலசேகரம் மறைவட்டம்
அழகியமண்டபம் மறைவட்டம்
பனச்சமூடு மறைவட்டம்


மறைபரப்புத்தளச் செய்திகள்


MCA


நற்செய்தி சங்கம்


MIDS


HOM
TNBC HEALTH CARE COMMISSION
KANYAKUMARI ZONE
CATHOLIC DOCTORS' MEET
இயேசுவின் பார்வையில் மருத்துவர்